Date.21.10.2024

கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம்)

விழுப்புரம்.

EA.08/2022 in EP.26/2013 in ACP.01/2010

எ.ம.சா.1

**பெயர்-** திரு.ராஜவேல்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு உதவியாளர் அவர்களால் சத்தியபிராமணம் செய்விக்கப்பட்டார்.

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

வீரபத்திரனுக்கு பத்திரத்தின் அடிப்படையில் நான் கடன் கொடுத்தேன் என்றால் சரிதான். வீரபத்திரனுக்கு அந்த சொத்து எந்த வகையில் பாத்தியப்பட்டது என்றால் அவரது மனைவி ஜோதிலட்சுமியின் பொது அதிகார முகவர் என்ற முறையில் சொத்தை கிரையம் கொடுத்துள்ளார். ஜோதிலட்சுமி மணவாளன் என்பவருக்காக பொது அதிகார முகவராக செயல்பட்டார். அந்த பொது அதிகார ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். பொது அதிகார ஆவணத்தில் சர்வே எண்கள். 167/7 பி, 167/8 ஆகியவை உள்ளது. அவரது பொது அதிகார ஆவணத்தை மனுதாரர் ம.சா.ஆ7 ஆக தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். ம.சா.ஆ7 பொது அதிகார ஆவணத்தில் மேற்சொன்ன சர்வே எண்கள் இல்லை. அந்த பொது அதிகார ஆவணத்தின் படி ஜோதிலட்சுமியும், வீரபத்திரனும் ஒரு விக்கிரைய உடன்படிக்கை போட்டார்கள் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. அந்த விக்கிரைய உடன்படிக்கையின் நகலை வாங்கி மனுதாரர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. அதை பற்றி அவர் மனுவிலும் சொல்லியுள்ளார், நீதிமன்றத்திலும் தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு அது குறித்து தெரியாது. பத்திரத்தில் கண்ட சொத்துக்கள் மணவாளன் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் மணவாளவனுக்கு மட்டுமே உரிய பாக சொத்து ஆகும். நான் பாக பிரிவினை ஆவணத்தை பார்த்துள்ளேன். என்னிடம் காட்டப்படுவது தான் அந்த பாக பத்திரம் என்றால் சரிதான். மணவாளன் பாகத்தில் நான் கூறிய சர்வே எண். வருகிறதா என்றால் இல்லை. அந்த சொத்து

மணவாளன் பாகத்தில் இல்லை என்றால் சரிதான். மணவாளன் அவர் பாகத்தை பொறுத்து ஜோதிலட்சுமிக்கு எழுதிக்கொடுத்த பொது அதிகார பத்திரத்தில் இல்லை என்றால் சரிதான். அவ்வாறு இல்லை என்பதை தற்போது நீதமன்றத்தில் சமர்பிக்கும் போது கவனித்தேன். இந்த பாக அட்டவணை மணவாளன் பாகத்திற்கு வந்த சொத்துக்களில் 67.1/2சென்ட் நிலம் தான் மணவாளன் பவர் ஏஜெண்ட் என்ற முறையில் ஜோதிலட்சுமி மற்றும் அவரது கணவரான வீரபத்திரன் என்பவருக்கு கிரையம் கொடுத்தது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.9 தான் நான் சொன்ன மேற்சொன்ன கிரைய பத்திரம். அதை நான் பார்த்துள்ளேன். நான் மேலே சொன்ன இரண்டு சர்வே எண்களில் தான் ரைஸ்மில் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்கள். 167/7பில் 96 செண்ட், 167/8ல் 65 சென்ட் நிலத்தில் தான் ரைஸ்மில் உள்ளது என்றால் சரிதான். எனவே மணவாளனுக்கு பாக பத்திரத்தில் ஒதுக்கப்பட்ட 84 சென்ட் நிலத்தில் ரைஸ்மில் உள்ளதாக குறிப்பிட்டிருப்பது தவறு என்றால் அது குறித்து எனக்கு தெரியவில்லை. மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை நான் பார்த்துள்ளேன். 167/7பி-ம், 167/8ம் சொத்துக்கள் மனுதாரர் தகப்பனார் மொட்டைய உடையாருக்கு, அவரது சகோதரருடன் பாகம் பிரித்துக்கொண்ட 08.07.1995 பத்திரத்தின் மூலமாக கிடைத்த சொத்துக்கள் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.1 ஆவணமானது மொட்டைய உயைடாரும், அவரது சகோதரரும் பாகம் பிரித்துக்கொண்ட பத்திரம் என்றால் சரிதான். அதில் 9,10 அயிட்டங்களாக இந்த சொத்துக்கள் குறிப்பிடபட்டுள்ளது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது.

**குறுக்கு விசாரணை கேட்டுக்கொண்டதற்கிணங்க பகுதியாக நிறுத்திவைப்பட்டு ஒத்திவைக்கப்படுகிறது.**